மலர் 1 இதழ் 1 ஜூலை, 2016 ISSN : 2454-3993

# வார்த்தா மாலை – தமிழ் வைணவக் கோட்பாட்டுப் பனுவல்

**ஜெ. செல்வம்**
முனைவர் பட்ட ஆய்வாளர்,
தமிழ்த் துறை,
காந்தி கிராம கிராமியப் பல்கலைக்கழகம்,
காந்திகிராமம்

மனிதன் தனது தேவைக்காக உற்பத்தியில் ஈடுபடும் போது அவனது உறவுகள், பண்பாடு, சமூக, சமயக் கட்டமைப்பு ஆகியவை பொருளை அடிப்படையாகக்கொண்டு தீர்மானிக்கப்படுகின்றன. உற்பத்திப் பொருட்களின் உபரிமதிப்பு மனிதனின் சிந்தனையைப் பலப்படுத்தி உழைப்பை மட்டுப்படுத்துகிறது. இதற்கேற்ப அவனது ரசனை பல்வேறு வடிவங்களில் வெளிப்படுகிறது. இப்பின்புலத்தில், சமூகத்தின் அடித்தளத்திலிருந்து கலை, இலக்கியம் முதலிய படைப்புகள் உருவாக்கம் பெறுகின்றன. சமூக இன அடையாளங்களைக் கட்டமைப்பதற்கு இலக்கியமும், வரலாறும் மிகத்தேவையான பங்களிப்பைச் செய்கின்றன. இவையிரண்டும் சமூகத்தின் ஊடாட்டங்களை தொடக்கம் முதல் இறுதிவரை நிகழ்ந்த வரலாற்றுக் கண்ணோட்டங்களைத் தமக்கே உரித்தான நிலையில் பதிவுசெய்கின்றன. தமிழ் இலக்கிய வரலாற்றில் தொகுப்புக்களாக அடையாளப்படுத்தப்படும் பனுவல்கள் தொடர்ச்சியாக இலக்கியம் எனும் நிலையில் உருகொடுக்கப்பட்டு வந்துள்ளன. ஒருவகையில் இத்தொகுப்புகள் ஒரு குழுவின் சமூக இயக்க செயல்பாட்டைத் தொழிற்படவைக்கும் கருவி நூல்களாகச் செயல்படுகின்றன. இவற்றில் கால மாறுபாடு, வரலாற்றுச் சிக்கல் போன்றவை நிலவியபோதிலும் ஒரு சமயம், மொழி சார்ந்த பண்பாட்டு நடவடிக்கைகளைக் கூர்ந்து நோக்குவதற்கு இன்றியமையாத ஆவணங்களாக இத்தொகுப்புகள் விளங்குகின்றன.

தமிழ்ச் சமூக அமைப்பில் இலக்கியங்கள் தொகையாக்கம் ஆவதற்கு முன்பே இலக்கணங்கள் திட்டமிட்டு வரையறுக்கப்பட்டன. உரையாசிரியர்கள் இப்பணியைச் செய்தனர். பன்னிரெண்டாம் நூற்றாண்டில் இம்முயற்சியை இளம்பூரணர் தொடங்கிவைத்தார். இதே காலகட்டத்தில் தமிழ் வைணவத்தின் மூல நூலாக விளங்கும் நாலாயிர திவ்யப்பிரபந்தத்திற்கு மணிப்பிரவாள நடையில் உரை எழுதும் பணிதொடங்கியது. அதனடிப்படையில், நம்மாழ்வாரின் திருவாய்மொழிக்குப் பதினோராம் நூற்றாண்டில் திருக்குருகைப்பிரான் பிள்ளான் தமது ஆறாயிரப்படி வாயிலாக மணிப்பிரவாள நடையை வளர்க்கத் தொடங்கினார். மறுபுறம் வைணவ ஆழ்வார் ஆசாரியர் பரம்பரை வரலாறுகளும் எழுதப்பட்டன. இவ்வரலாறுகளும் மணிப்பிரவாள நடையில் அமைந்திருந்தன. ‘ஆறாயிரப்படி குருபரம்பரை பிரபாவம்’ என்னும் வைணவ முதல் வரலாற்று நூலைப் பின்பழகிய பெருமாள் ஜீயர் தொகுத்தார். இவர் நம்பிள்ளையின் மாணவர் ஆவார், ஜீயர் தான் வாழ்ந்த காலத்தில் தன் முன்னோரின் பொன்மொழிகளை ஒரு பனுவலாக ஆக்கினார். அதற்கு ‘வார்த்தா மாலை’ என மணிபிரவாள நடையில் பெயர் அமைத்தார். வார்த்தா மாலை நானூற்று ஐம்பத்திஏழு வார்த்தைகளைக் கொண்டது. நாதமுனிகள் காலம் தொடங்கி நம்பிள்ளை காலம் வரை செயல்பட்ட வைணவ ஆசாரியர்களின் வார்த்தைகள் இதில் இடம்பெற்றுள்ளன. இப்பனுவல் வைணவத்திற்குரிய அடையாளம், கோட்பாடு, வைணவத்தின்

தன்மைகள், பிரபத்தியின் சிறப்பு, அடியார் மதிப்பு, அடியார் வழிபாடு, ஆசாரியனின் மேன்மை, வைணவ ஆசாரியர்களின் வாழ்க்கையில் நடந்த அனுபவங்கள், கதைகள் முதலிய நிகழ்வுகளை உள்ளடக்கியுள்ளது. மேலும் வார்த்தாமாலை, தமிழ் வைணவத்திற்கான கோட்பாட்டை வலியுறுத்தும் பனுவலாக விளங்குகிறது.

**செவ்வியல் உரை வரலாற்றில் வார்த்தாமலை**

பழந்தமிழ் இலக்கியப் பனுவல்கள் பல்வேறு சிந்தனைகளின் அடிப்படையில் உரையெழுதும், வாசிக்கும் முறையில் அணுகப்பட்டன. தொல்காப்பியமும் சங்க இலக்கியங்களும் இத்தகைய உரை முயற்சிக்கு உள்ளாக்கப்பட்டன. நச்சினார்க்கினியர், பரிமேலழகர், கல்லாடர் முதலியோரை இம்முயற்சிக்குச் சான்றாகக் குறிப்பிடலாம். இவ்வாறு அமைந்த தமிழின் நீண்ட உரை வரலாற்றுப் போக்கில் வைணவ உரைகள் விசேடமான இடத்தைப் பெறுகின்றன. இந்நிலையில் ஐரோப்பியர்களின் வருகை தமிழ்ச் சமூக அடுக்குகளில் மறுமலர்ச்சியான சிந்தனைப் போக்குகளை உருவாக்கியது. இதன் காரணமாகத் தமிழில் நவீன உரைநடை வளர்ச்சி கண்டது. ஆனால் அதற்கு வெகுகாலத்திற்கு முன்பாகவே வார்த்தாமாலை தொகுக்கப்பட்டது. வார்த்தாமாலையில் எழுத்து நடையைத் தாண்டி அன்று புழங்கிய வைணவ உரைகாரர்களின் பேச்சு நடையே பெரிதும் கையாளப்பட்டுள்ளது. வைணவம் மதமாக நிறுவனமயமாக பின்பு, அதனை நிலைநாட்டுவதற்கான தத்துவங்கள், கோட்பாடுகள், இலக்கணங்கள் முதலியவற்றைத் திட்டமிட்டு வழங்கும் சொல்லும் பணியை இந்நூல் மேற்கொண்டுள்ளது.

**அடியார் வழிபாடும் வைணவமும்**

ஒரு சமயமானது அரசியல், சமூக, பண்பாட்டுக் காரணிகளுக்கு அப்பால் சமூகத்தின் இயங்குதளத்திற்கு வெளியே செயல்படும் அதிகார மையங்களால் கருத்தியல் தளத்தில் நிறுத்தப்படும்பொழுது அடியார்களே தூண்போன்று அச்சமயத்தைத் தாங்கும் வலிமை பெற்றவர்களாக விளங்குகின்றனர். சோழர்காலச் சமூகத்தில் ஆட்சியாளர்களும், வேறுசில அதிகார அமைப்புகளும் சைவத்திற்கு முழு ஆதரவும் ஒத்துழைப்பும் அளித்தனர். வைணவம் தன்னைத் தகவமைத்துக் கொள்ளச் சமுதாயத்திற்குள் ஊடுருவிச் சென்றது. அனைத்துத் தரப்பு மக்களையும் தன்பால் ஈர்க்கும் வேலையைச் செய்தது. இத்தகைய சமய ஈர்ப்பிற்கு வைணவம் கொடுத்த பெயர்தான் அடியார் என்பதாகும். அடியார் வழிபாடு, வைணவத்தில் குறிப்பிட்டுச் சொல்லும்படியாகப் புணரமைக்கப்பட்டது. அதனை வார்த்தாமாலையின் வழிகாண முற்படலாம். நம்பிள்ளைக்கும் பின்பழகிய பெருமாள் ஜீயருக்கும் இடையே நடைபெற்ற உரையாடல் கவனப்படுத்தப்பட வேண்டி உள்ளது. நம்பிள்ளை ஜீயரிடம் இச்சை ஸ்வரூபம் இரக்கம் உபாயம் இனிமை உபேயம் என்று உரைக்க, ஜீயர் அதனைத்தாண்டி,

**“தேவரீர் அருளிச் செய்த படியே நினைத்திருக்கும் ஸ்ரீவைணவர்களுக்கு அடிமையாய் இருக்கை– ஸ்வரூபம் அவர்களுடைய அபிமானம்–அடியேனுக்கு உபாயம் அவர்கள் முகமலர்த்தி அடியேனுக்கு உபயேம் என்று இருப்பேன்” (வார்த்தை 2)**

என்று குறிப்பிட்டார்,

வைணவத்தை தழுவிய அடியார்களுக்குப் பணிந்து நடத்தல், அவர்களுடைய பற்றுதலை மதித்தல், முகமலர்ச்சி கண்டு மகிழ்தல் மெய்யான வைணவ இலக்கணம் என்று

ஜீயர் கூறுகிறார். வைணவம் இயங்கிய சமகாலத்தில், பிற தத்துவங்களை நோக்கும் பொழுது, அவற்றின் சில தாக்கங்கள் வைணவத்திற்குள் வந்திருப்பதாகத் தெரிகிறது. வீரசைவம் என்னும் கன்னட பிரிவில் அடியார் வழிபாடு வைணவத்தைப் போலவே உரிய முறையில் பேணப்பட்டு வந்துள்ளது என்பதும், இஸ்லாமிற்குள் ஒரு பிரிவாகிய சூஃபி துறவிகள் அடியார் வழிபாட்டிற்கு முன்னுரிமை கொடுத்தனர் என்பதனையும் இங்கு சிந்தித்தல் பொருத்தமாக இருக்கும். அது போலத் தமிழ்ச் சமூகத்தில் அன்று சித்தர்களின் கலகக்குரலும் ஒலித்தது. சித்தர்கள் நிறுவனச் சமூக சமய அமைப்புகளுக்கெதிராகச் செயல்பட்டதோடு மனிதநேயத்திற்காகவும் குரல் கொடுத்தனர். ஆக வைணவத்தின் அடியார் வழிபாட்டை இச்சிந்தனை மரபுகளுக்கு ஊடாகச் சென்று நோக்கினால் மேலும் சில புரிதல்களை அடைவதற்கான சாத்தியங்கள் இருக்கின்றன.

**வைணவ அடியார் இலக்கணம்**

அடியார்கள் தமிழ்ச் சமூகத்தில் ஒரே தரத்தினராக இல்லை. பல்வேறு நிலப்பகுதிகளில் பல சாதிப் பிரிவுகளாக குழுக்களாக இயங்கினர். இதன் விளைவு பொருளியல், பண்பாடு முதலிய காரணிகளில் ஏற்றத்தாழ்வுகள் காணப்பட்டன. இதனை வைணவம் நன்றாகப் புரிந்துகொண்டது. திருமால் என்னும் அளவுகோலைக் கொண்டு சமூகத்தில் ஒரு சமாதான உடன்படிக்கையை ஏற்படுத்தும் வேலைத்திட்டத்தில் இறங்கியது. அதன் ஒரு பகுதியாக அடியார் ஆவார் யார்? என்னும் வினாவிற்கு இலக்கணம் உருவாக்க நினைத்தது.

“அஹங்காரமாகிற ஆர்ப்பைத் துடைத்தால் ஆத்மாவுக்கு அழியாதபேர் ஷஅடியான்’ என்றிரே” என்று வடக்குத் திருவீதிப் பிள்ளை (வார்த்தை 51)

கூறுகிறார். இந்தியத் தத்துவங்கள் சுட்டிக்காட்டும் மனிதனின் முதல் எதிரி அகங்காரமே. அதனைக் கட்டுப்படுத்தியவன் எல்லா நிலைகளிலும் மதிக்கப்படுவான். வடக்குத் திருவீதிப் பிள்ளை சுட்டிக்காட்டுவது இங்கு அகங்கார ஒழிப்பேயாகும். அடியான் தன்னைத் தூய்மையானவனாக அடையாளப்படுத்த வேண்டுமாயின் தனக்குள்ளிருக்கும் அகங்காரமாகிய செருக்கைத் துடைத்தெறிதல் அவசியம். வைணவம் அப்போதுதான் அவனை அடியாரென்று ஏற்றுக்கொள்ளும். நிலவுடைமைச் சமூகத்தில் பெரும் நிலக்கிழார்களின் உபரி உற்பத்தி காரணமாகச் சொத்துக்கள் தேக்கமடைந்தன. இதனால் நிலக்கிழார்களின் உழைப்பு முற்றிலும் இல்லாமல்போயிற்று. இச்சூழலில் அவனுக்குள் இந்தியத் தத்துவங்கள் யாவும் பொதுவாகக் குறிப்பிடும் பொய், களவு, காமம் முதலிய உணர்வுகள் தோன்றின. இவற்றைக் கட்டிக்காப்பது அகங்காரம்தான். எனவே, இந்த அகங்காரத்தை எவன் ஒழிக்கிறானோ அவனைத்தான் தொடக்ககால வைணவம் விசையோடு நாடிச் சென்றது. வைணவம் குறிப்பிடும் அகங்காரம் ஒடுக்கப்படும் நிலையைச் சமூகவெளியில் மேல்கீழ் என்னும் படிநிலைகளுக்கிடையில் பெயரளவிலான ஒரு சமாதானத்தை எதிர்ப்பார்க்க அல்லது ஏற்படுத்தமுடியும். இதன் ஊடாகவே வைணவம் அடியார்களுக்கான இலக்கணத்தைப் பொதுவாக முன்வைத்து அகங்கார ஒழிப்பு என்பது சமூகத்தில் அதிகாரத்தை ஒழிப்பதற்கான வழியாகக் கருதலாம்.

**ஆசாரியரும் வைணவமும்**

தமிழ்ச் சமூகத்தில் தொடக்கத்திலிருந்தே ஆசாரியர்கள் (ஆசிரியர்கள்) பெரும் செல்வாக்குடன் விளங்கினர். வெவ்வேறு காலகட்டங்களில் இவர்கள் பல்வேறு பெயர்களில் அழைக்கப்பட்டு வந்துள்ளனர். ஆசிரியனின் பணி சமயத்துறையில் மிகவும் இன்றியமையாத இடத்தைப் பெறுகிறது. ஆசிரியர் –மாணவர் உறவு (குரு – சீடர்) கட்டாயமாகச் சமூகத்தில் கடைபிடிக்கப்படும் ஒன்றாகும். சமய வரலாறுகள் சில தனது அடியார்களை இறைவனே ஆசாரியனாக வந்து ஆட்கொள்வதாக எடுத்துரைக்கின்றன. எனினும் வைணவம் ஆசாரியனை

இறைவனாகிய திருமாலைவிட உயரிய இடத்தில் வைத்துச் சிறப்பித்தது. ஆசாரியன் சகலத்ததையும் கற்பிக்கும் அதிகாரம் கொண்டவனாக வைணவம் தனது கோட்பாட்டு அடிப்படையில் கூறியது. மாணவன் கண்ணியமாக ஆசாரியனிடத்தில் நடந்துகொள்ள வேண்டும் என அறிவுறுத்தியது. மேலும் அவன் தன்னைக் கொடுத்தாவது வைணவக் கல்வியைப் பெற்றுக்கொள்ள ஊக்குவித்தது. அதன் ஒரு நிலையாக,

"ஆசார்ய கைங்கர்யமாவது–அநி'டம் தவிர்கையும், இ'டம் செய்கையும். அவை இரண்டிலும் வைத்துக்கொண்டு அநி'டம் தவிர்க்கையே ப்ரதாநம்" (வார்த்தை 12)

இவ்வாறு கூறியது. ஆசிரியனின் விருப்பத்தை அறிந்து செயல்படுவது, ஆசிரியன் விரும்பாத செயல்களைச் செய்யாமலிருப்பது என்பது இதன் பொருள் ஆகும். இது வைணவக் கல்வியைப் பெற ஆசைப்படும் ஒரு மாணவனுக்கு நினைவில் இருக்க வேண்டிய சிந்தனையாகும். ஆசிரியனின் வெறுப்பிற்கு ஆளானால் கடும் விளைவுகளைச் சந்திக்க நேரிடும். திருமால் இறங்கி வந்தால்கூடத் தீர்க்க இயலாது. எனவே ஆசிரியனுக்கு உகந்த மாணவனாக இருந்து கல்வியைப் பெறுதல் சிறப்புடையது என வைணவம் கூறுகிறது.

வைணவத்தில் முன்னெடுக்கப்பட்ட ஆசாரிய மரபின் முக்கியத்துவம் ஒப்பீட்டளவில் பிற சமயங்களில் சற்றுக்குறைவு என்றே அவதானிக்க முடிகிறது. வரலாறுகளை நோக்கும்பொழுது ஆசாரியனுக்கான மாணவன் தன் உயிரையே கொடுத்ததனைக் குருபரம்பரை வரலாறுகள் கூறுகின்றன. சான்றாக, நஞ்சீயர், தமது ஆசான் பட்டருக்காக ஓர் இரவு முழுவதும் தூக்கம் கலையாதபடி அசைவற்றிருந்தார். இதுமாதிரியான பல சான்றுகளைச் சுட்டிக்காட்ட முடியும்.

**வைணவ ஆசாரியனின் அதிகார வரம்பு**

தமிழ் வைணத்தில் கல்வி (விசிஸ்டாத்வைதம்) கற்பிக்கும் ஆசான் வலிமையான அதிகாரத்தைப் பெற்றிருந்தான். இறைவனாகிய திருமால்கூட ஆசானுக்குப் பணிந்துதான் நடந்துகொள்ள வேண்டும். திருமாலுக்கே இவ்வாசிரியர்கள்தான் பல்வேறு விசேட இலக்கணங்களைக் (வசன பூசனம்–ஆசாரிய ஹிருதயம்) கற்பித்தனர். ஆக ஆசிரியனின் அதிகாரம் சகலவற்றையும் கட்டுப்படுத்தக்கூடிய சக்தி படைத்ததாக இருந்தது. ஆச்சாரியனைப் பகைத்துக்கொள்ளுதல் வைணவத்தில் உவப்பானதாகக் கருதப்படவில்லை. ஆசாரியன் மாணவன் இடையே கருத்து வேறுபாடு ஏற்படின் அது கவலைக்குரியதாக உணரப்பட்டது.

"த்ரு"டத்தில் கர்மாதீநமாக ஏதேனும் சுருங்க உண்டாகில் ஆசார்யனை வெறுத்தபோது பெருமாளைக் கொண்டு தீர்த்துக் கொள்ள வொண்ணாது, பெருமாளை வெறுத்தானாகில் ஆசார்யனைக் கொண்டு தீர்த்துக்கொள்ளலாம்" (வார்த்தை 104)

ஆசாரியனிடம் உருவாகும் பூசல் தீர்க்க முடியாதது என்பதை வைணவம் பொதுமைநிலைச் சமூகத்திற்குத் தெளிவுபடுத்தும் கருத்தாகும். ஒரு சமூகத்தில் எந்த மனிதனிடம் அறிவு வளமாக இருக்கிறதோ அம்மனிதன் அதிகாரத்திற்கு மிகவும் நெருக்கமானவனாகப் பார்க்கப்படுகிறான். இதனை ஒரு புறநானூற்றுப் பாடல் (183), ஒரு தாய் அறிவான பிள்ளையையே விரும்புவாள் என்று கூறுவதும் இங்கு சிந்தனைக்குரியதே. உடல் உழைப்பில் ஈடுபட ஆயத்தமாய் உள்ள மக்களை மூளை பலத்தினால் நெறிப்படுத்தும் பணியினை ஆசாரியன் செய்கிறான். உடல் உழைப்பு இங்கு கல்வி என்னும் நிலைக்கு கொணரப்பட்டு சமயச்சிந்தனையாக மடைமாற்றம் செய்யப்படுகிறது. இதன் விளைவாக உடல் உழைப்பின் வாயிலாகக் கிடைக்கும் பரந்துபட்ட அனுபவங்கள், காட்சிகள் (தரிசனம்), பட்டறிவு ஆகியன பின்னோக்கி சமயப் பற்றாக, இறைக் காதலாக மலர்ச்சி அடைகிறது. இப்பணியினை மூளைபலம் கொண்ட ஆசாரியனே மேற்கொள்கிறான். எனவே ஆசாரியனை எப்பொழுதும்

பகைத்துக்கொள்ளக் கூடாது என்று தனது அடியார்களுக்கு வைணவம் எச்சரித்தது. இன்றைய சமகாலக் கல்விச் சூழலிலும் ஆசிரியர், மாணவர் உறவில் இதன் தொடர்ச்சியைக் காணமுடியும்.

**வைணவமும் திருமாலின் எளிமைத் தன்மையும்**

வைணவதத்துவ மரபு திருமாலுக்கு மூன்று குணங்கள் இருப்பதாகக் கூறுகிறது. அவை சௌந்தர்யம் (அழகு), சௌசீலியம் (இனிமை) மற்றும் சௌலப்பியம் (எளிமை) என்று பட்டியல் இடுகிறது. வைணவம் இம்முக்குணங்கள் திருமாலுக்கு உள்ளன என்று கூறுவதற்குக் காரணங்கள் உள்ளன. ஆனால் வேறுபல சமயங்களில் அடியாருக்கு இறைவன் உவப்பானவனாக இருப்பான். சைவத்தில் சிவபெருமான் தனது அடியார் எல்லோர்க்கும் அந்தண வேடமணிந்து தானே காட்சி கொடுத்தான். குறிப்பாக பெரியபுராணம் போன்ற சைவப் பனுவல்கள் கூறும் திருவிளையாடல்களின் மூலமாகவே அடியார் குலத்திற்குத் தன்னை அடையாளப்படுத்திக் கொண்டான். அடியார்கள் சிவனை நேரடியாகச் சென்று அணுகுவது சைவத்தில் சற்றே குறைந்திருந்தது. அன்று நிலவிய பார்ப்பனிய வருணாசிரம வெள்ளாளச் சாதிகளின் அரசியல் சிவபெருமானின் இத்தன்மையை உறுதிப்படுத்தின. உழுகுடிகளோ, அடித்தள மக்களோ எந்தச் சூழலிலும் சிவனை எளிதில் அணுகாதவண்ணம் பார்த்துக் கொண்டது. வார்த்தாமாலையின் காலத்தில் வாழ்ந்த உமாபதி சிவாச்சாரியார் இதற்கு வலிமையான சான்றாவார். அவர் 'பெற்றான்சாம்பான்' என்னும் பறையர் குலத்தைச் சார்ந்த ஒருவருக்குத் தீக்கை அளித்ததற்காகத் தில்லைவாழ் தீட்சிதர்களால் சாதி சமய விளக்கம் செய்யப்பட்டார். இங்கு பெற்றான்சாம்பானுக்குத் தீக்கை அளிக்கை சிவபெருமான் கொடுத்த பரிந்துரைக் கடிதமும் செல்லுபடியாகவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. எனினும் வைணவத்தில் இந்நெருக்கடி சற்றுக் குறைந்திருந்தது. திருமால்தானே தன் அடியார்களை உவந்து ஏற்றுக்கொள்வதாகப் பல்வேறு சூழகளில் வைணவ உரைகாரர்கள் எடுத்துக்காட்டியுள்ளனர். அடியார்களை வகைபிரித்துத் திருமால் ஏற்றுக்கொண்டான் என்றும் கூறுகின்றனர். இதனைப் பின்வரும் வார்த்தாமாலையின் வழியாக,

"கழிந்திருப்பாரை எம்பெருமான் தன் இனிமைக்கு வி'யமாக்கும் அகப்பட்டோம் என்று இருப்பாரைத் தான் இரக்கத்துக்கு வி'யமாக்கும் உடன்பட்டிருப்பாரைத் தன் லைக்கு வி'யமாக்கும்" என்று முதலியாண்டான்" (வார்த்தை 13)

கூறுகிறார். நலிவடைந்தவனைத் தன் இனிமைக்கும், அடைக்கலம் கோருபவனைத் தனது இரக்கத்திற்கும், நிறைந்த அன்புடையோரைத் தனது காதலுக்கும் திருமால் உள்ளாக்குவான் என வைணவம் இறுக்கமற்ற, நெகிழ்ச்சியுடைய அகம்சார் கருத்துநிலையினை முன்வைத்தது. இஸ்லாமியர்களை இராமானுசர் கால வைணவம் நட்பு முறையில் அணுகியதை இப்பின்புலத்தில் விளங்கிக்கொள்ள வேண்டும்.

**மாங்கல்யமும் திருமந்திரமும்**

தமிழக வரலாற்றில் சமயங்கள் தத்துவங்கள் தமக்கெனச் சில தத்துவக் கோட்பாடுகளையும் கொள்கைகளையும் பேணிவருகின்றன. சமயக் கொள்கைகள், மறைமொழிகள் இறைவனுக்கு நிகரானவைகளாக மதிக்கப்படுகின்றன. மறைமொழிகள் (மந்திரங்கள்), இறைவனுக்கும் அடியானுக்கும் இடையே இணைப்புப்பாலமாக இருக்கின்றன. இந்நிலையில் இராமானுசர் உருவாக்கிய விசிஸ்டாத்வைதத்தில் மந்திரங்கள் இறைவன் அடியாருக்கு வழங்கும் அருட்சாதனமாகக் குறிப்பிடப்படுகிறது. அடியான் தனது எஜமானைச் சென்றடைய வேண்டுமெனில் திருமந்திரத்தைக் கண்டிப்பாக ஒலித்துக்கொண்டிருக்க வேண்டும். இதனைப் பிள்ளை திருநரையூர் அரையர்

“இவ்வாத்மாவுக்கு எம்பெருமான் கட்டின மங்கல்ய ஸீத்ரம் திருமந்த்ரம்” (வார்த்தை 31)

இவ்விதம் அடியாருக்கு இறைவன் அணியும் தாலிக்கயிற்றுக்குத் திருமந்திரத்தை உவமையாக்குகிறார். மந்திரங்கள்தான் சமயங்களைப் புனிதப்படுத்தும் வேலையைச் செய்கின்றன. இதன் பின்புலத்திலேயே சமயப் பிரிவுகளுக்குள் ஏற்றத்தாழ்வுகளும் சிக்கல்களும் தோன்றுவதையும் மறுப்பதற்கில்லை. தமிழ்ச் சமூகத்தில் சில சாதிகள் மந்திரங்களைச் சொல்லும் தகுதியுடையவனாகவும், சில சாதிகள் மந்திரங்கள் சொல்லுவதிலிருந்து விலக்கி வைக்கப்படுவதும் திருமந்திரங்களின் பின்னணியிலேயே நிகழுகின்றன.

**விசிஸ்டாத்வைத விளக்கம்**

தென்கலை வைணவம் மூன்று விதமான தத்துவங்களை முன்வைக்கின்றது. அவை திருமந்திரம், த்வயம், சரமசுலோகம் என்பவையாகும். இவை மூன்றையும் வைணத்ததைத் தழுவிய திருத்தொண்டர்கள் கட்டாயமாகக் கடைபிடித்து ஒழுக வேண்டும். ஒருவன் சமூகத்தில் எவ்வளவு தாழ்நிலையில் இருந்தபோதிலும் இம்மூன்றையும் நினைத்தானாகில் பரமபதம் அவனுக்கு எளிதில் கிடைத்துவிடும். இதுவே விசிஸ்டாத்வைதத்தின் அடிப்படை. திருமந்திரத்திற்கும் த்வயத்திற்கும் இடையிலான வேறுபாட்டினை வைணவம் இப்படி நுட்பமாகக் கூறுகிறது. இவ்வேறுபாட்டினை வார்த்தாமாலை பின்வருமாறு விளக்குகிறது.

“திருமந்த்ரம் விலைப்பால் த்வம் முலைப்பால்” (வார்த்தை 446)

எட்டெழுத்தில் அமைந்த திருமந்திரம் விலைப்பால் போன்றது. ஆனால் ஈரடிகளில் அமைந்த த்வயம் தாயின் முலைப்பாலுக்கு இணையானது. வைணவர்கள் ஓதும் திருமந்திரம் நாராயணனை மட்டுமே குறிப்பதாக நம்புகின்றனர். இம்மந்திரம் அடியார்களுக்கு வலுவான ஊன்றுகோலாய் இருக்காது. த்வயம், திருமகள் எப்போதும் பிரியாது இணைந்திருக்கும் திருமாலைக் குறிக்கிறது, திருமால் சில வேளைகளில் தன் அடியார்களின் அவலக்குரலுக்குச் செவிசாய்க்காதுபோனால், திருமகள் அடியார்களுக்குப் பரிந்து திருமாலிடம் எடுத்துரைக்கிறாள். அடியார்கள் திருமகள் வழியாகத் திருமாலின் பரமபதத்தை (திருநாடு) அடைகின்றனர். இன்னிலைக்குப் புரு’காரம் என்று பெயர். புரு’காரம் விஸ்டாத்வைத மரபில் தாய்மை போன்று சிறப்பிக்கப்படுகிறது.

குறிப்பாக, தென்கலை வைணவர்கள் இப்புரு’காரத்திற்கு மிகுந்த முன்னுரிமை அளிக்கின்றனர். தமிழ் அகமரபில் பிரியாதிருக்கும் தலைவன் தலைவி போன்று, திருமாலும் திருமகளும் பார்க்கப்படுகின்றனர். இத்தகு அகமரபின் ஊடாக, தத்துவம் புரியாதவர்களுக்கு எளிய உவமைகளின் மூலம் வைணவம் தமிழ் மண்ணோடு இணைக்கப்பட்டது என்பதே நாம் பெறும் முடிவாகும்.

**வைணவமும் ப்ரபத்தியும்**

இறைவனை அடியார்குலம் அடைவதற்கு எண்ணற்ற வழிமுறைகள் சமயங்களில் (மார்க்கங்கள்) பரிந்துரைக்கப்படுகின்றன. சைவசமய வரலாற்றில் நான்கு வகையான வழிமுறைகள் அடியார்களுக்கென உருவாக்கப்பட்டுள்ளன. இறையடியார்கள் தமக்கு விருப்பமான வழிமுறையைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம். வைணவத்திலும் அப்படியொரு வழிமுறை உருவாக்கப்பட்டது. இவ்வழிமுறைக்கு ‘ப்ரபத்தி’(சரணடைதல்) என்று பெயரிடப்பட்டது. திருமாலை முழுமையாக அடைக்கலம் புகுதல் ‘ப்ரபத்தி’ எனக் கூறப்பட்டது. அதாவத இராமானுசர் இப்பரபத்தி முறைக்கு மிகுந்த முன்னுரிமை அளித்தார். இதன் துணைகொண்டு மைசூரில் உள்ள மேலக்கோட்டையில் வாழ்ந்த ஒடுக்கப்பட்ட மக்களுக்கு ‘திருக்குலத்தார்’ என்னும்

பெயர் சூட்டிக் கோயிலுக்குள் அழைத்துச் சென்றார். இவரின் காலத்தில் மனிதநேயமிக்கதாக ப்ரபத்தி முறை உருவாக்கப்பட்டது. அப்ப்ரபத்திமுறை எப்படிப்பட்டது என்றால்,

'பற்றிற்றெல்லாம் பற்றி அவனையும் பற்றுகை பக்தி விடுவதெல்லாம் விட்டுத் தன்னையும் விடுகை ப்ரபத்தி' (வார்த்தை 67)

என்று வைணவம் இவ்வாறு விளக்கியது. பக்தியைவிடவும் ப்ரபத்தி மேன்மையானதாக முன்நிறுத்தப்பட்டது.

**வைணவத்தில் ப்ரபத்தி உருவான வரலாறு**

வரலாற்றில் சில கோட்பாடுகள் உருவாக சில சூழல்கள் முரண்கள் மிகவும் தேவையானவையாக இருக்கின்றன. சமயங்கள் தமது கோட்பாடுகள் எல்லாவற்றையும் இதிகாசங்கள், புராணங்களிலிருந்து உருவாக்கிக்கொண்டன. வைணவம் இதற்கு விதிவிலக்கல்ல என்றாலும் இராமாயண, மகாபாரத்தில் இறைவனின் அருளுக்குச் சான்றளிக்கும் வரலாற்று நிகழ்வுகள் சிலவற்றை நடைமுறை வாழ்க்கையில் பொருத்தி மகிழ்ச்சிகண்டது. மேலும் பட்டர், ப்ரபத்தியை புதுப்பிப்பதற்கு அவர் ஒரு வேடனோடு நிகழ்த்திய உரையாடலைப் பயன்படுத்திக்கொண்டார். அக்கதை என்னவெனில், பட்டர் ஒருநாள் மாலை மயங்கிய நேரத்தில் ஒரு வேடனின் வீட்டில் தங்கினார். வேடனும் அவனது மனைவியும் முற்றிலும் அறிமுகமில்லாத போதும் பட்டரிடத்தில் அன்பாக நடந்துகொண்டனர். இது பட்டரின் உள்ளத்தில் ஒரு நெகிழ்ச்சியை ஏற்படுத்தியது. பின் அவர்கள் உரையாடத் தொடங்கினர்.

**'ஐயா! இற்றைக்க விஸேஷம் என்? என்று கேட்டருள, "நாயன்றே! காட்டிலே வேட்டைக்குப் போனேன். அங்கே ஒரு முசல் குட்டியைப் பிடித்தேன். அதினுடைய தாயானது பின்னே முடுகிவந்து, ஒரு எரிவெளியானவாறே முன்னேவந்து கும்பிட்டுக்கொண்டு கிடந்தது. எனக்கு அத்தைக் கண்டு வயஸநமாய்க் குட்டியை விட்டேன்"** (வார்த்தை 131)

இவ்வாறு உரையாடினர். வேட்டைக்குச் சென்று விலங்குகளைக் கொல்வதையே தொழிலாகக் கொண்ட வேடனுக்கே இவ்வளவு இரக்கம் இருக்கும்போது நம்மைப் படைத்துக்காக்கும் திருமாலுக்கு உயிர்கள் மீது உறுதியாக இரக்கம், கருணை எவ்வளவு இருக்குமென்று எண்ணி ப்ரபத்தியை மேலும் விரிவாகப் புனரமைத்து அடியார்களிடம் கொண்டு சேர்த்தார். தென்கலை வைணவம், கண்ணபிரான் விதூரர் வீட்டில் உணவு உண்டதையும், சபரியின் விருந்தோம்பலை இராமன் ஏற்றுக்கொண்டதையும், சடாயு என்னும் பறவைக்கு இராமன் இறுதி கிரியைகள் செய்ததையும் பெரிதாகப் போற்றுவது இப்பின்புலத்தில்தான்.

**எது வைணவ தத்துவம்?**

தமிழ் இலக்கியத்தில் வைணவம், சமயத்தின் அடையாளப் பெயர், திருமால் அவர்கள் முன்வைக்கும் வைணவக் கடவுள். திருமந்திரம் போன்றவை சமயத்திற்கான கோட்பாடுகள். ஆனால் வைணவ தத்துவம் என்பது வேறானதாக விளக்கப்படுகிறது. ஒவ்வொரு சமயத்திற்கும் அவற்றின் தன்மைகளில் தனித்துவங்கள், வேற்றுமைகள் காணப்படுகின்றன. அதுபோல வைணவமும் வைணவ தத்துவம் உடைய மனிதன் யார்? என்னும் வினாவிற்கு,

"அத்ருஷ்டத்தை த்ருஷ்டமாக அநுஸந்தித்தும் த்ருஷ்டத்தை அத்ருஷ்டமாக அநுஸந்தித்த போதுமிறே இவன் முமுவாவது" (வார்த்தை 93)

என்னும் பட்டரின் இவ்விளக்கத்தைத் தருகிறது. முமுக்கள் முற்றும் உணர்ந்த ஞானிகள் ஆவர். இவர்கள் வாழ்க்கையின் அனைத்து மட்டங்களிலும் எல்லாவற்றையும் இயல்பாக

எதிர்கொள்ளக் கூடியவர்களாக இருப்பார்கள். அதாவது சமூகத்தில் எவ்வளவுதான் ஒருவன் சொத்துக்கள் வைத்திருந்தாலும், ஒருவன் வைணவத்தை ஏற்றுக்கொண்டால் திருமாலுக்கு முன் சொத்துக்கள் அற்றவனாக இருக்கவேண்டும். அதுபோல ஒருவன் எவ்வளவு தாழ்நிலையில் இருந்தாலும் திருமாலுக்கு முன் மேற்கண்ட உடைமையாளனக்குச் சமமானவனேஆவான். இங்கு இருவரின் நிலையும் ஒன்றுதான். இத்தகையவர்களே அல்லது இவர்கள் நிறைந்த அடியார் கூட்டத்தையே திருமால் பரமபதத்தில் வைத்துக்கொள்கிறான் என்கிறது வைணவம்.

**வைணவமும் சமூக அக்கறையும்**

தமிழ்ச்சமூகத்தில் வைணவம் வடகலை, தென்கலை என்னும் இரு பிரிவாக மாறிய பின்பு தென்கலை வைணவம் சமூகத்தின் உழைக்கும் வர்க்கத்தினரையும் அடித்தள மக்களையும் சார்ந்தே தன்னைக் கட்டமைத்துக்கொண்டது. அதற்கு ஏற்ப சில நெகிழ்ச்சியான கோட்பாடுகளை உருவாக்கியது. அன்றைய சமூகத்தில் வைணவத்தின் இத்தகைய நிலைப்பாடுகள் சலசலப்பை ஏற்படுத்தின. சமூகத்தில் மரபுமீறல் குறித்த விவாதங்கள் தீவிரமாக முன்வைக்கப்பட்டன. அச்சூழலில் ஆழ்வார்களையும் தமிழ்ச் சமூகத்தையும் சார்ந்து இயங்கிய தென்கலை வைணவம் நிலஉடைமைச் சமூகத்திற்கு எதிராகப் புதுவகை வைணவ இலக்கணத்தை உருவாக்கித்தந்தது. அவ்விலக்கணம் அடியார்க்குக் கல்வி என்னும் வகையிலும், உடைமைச் சமூகத்திற்கு எதிரான விமர்சனமாகவும் அமைந்தது. அது

"த்ரு'டத்துக்கு நாக்கு நீட்டாதொழிகையம், அத்ரு'டத்துக்கு கை நீட்டாதொழிகையும் காண், வை'ணவ லணம்" (வார்த்தை 351)

இவ்விதமாக எடுத்துரைத்தது. ஓர் அடியான் (வைணவன்) பொருளாசை அற்றவனாக, உழைப்பை மதிப்பவனாக விளங்க வேண்டும். பொருள் எளிதில் கிடைக்கிறது என்பதற்காக ஆசைப்படுவதைத் தவிர்க்க வேண்டும் எனவும் வலியுறுத்துகிறது. அதுபோல வியர்வைசிந்தி உழைத்துக் கண்ணியமாக வாழவேண்டும் என்றும் வைணவம் பரிந்துரைக்கின்றது. இவ்வாறு வாழ்பவனே வைணவன் ஆவான்.

**எம்பெருமானாரும் வைணவமும்**

ஒரு சமூக வரலாற்றில் மக்களைச் சார்ந்து சிந்திக்கும் சிந்தனையாளர்கள், சீர்திருத்தவாதிகள், புரட்சிக்காரர்கள் தோன்றிச் செயல்படும்போதுதான் வரலாறு முழுமையடைகிறது. கி.பி. 11 ஆம் நூற்றாண்டில் தமிழகத்தில் தோன்றிய இராமானுசர், இந்திய வரலாற்றில் ஒரு சமூகசமயத் தாக்கத்தை ஏற்படுத்தினார். வைணவத்தில் சாதி ஒழிப்பு என்னும் குரலை வலுவாக முன்வைத்தவரும் இராமானுசர்தான். அவர் திருக்கோட்டியூர் நம்பியிடம் நிகழ்த்திய உரையாடல் ஒன்று வார்த்தாமாலையில் இடம்பெற்றுள்ளது, அது.

"திருக்கோட்டியூர் நம்பிஸ்ரீபாதத்திலே உடையவர் பதினெட்டு ப்ரகாரம் எழுந்தருள்," இன்னமும் கேட்க வந்தீரோ? என்ன உடையவர்" ஒருரு இரண்டுரு ஆந்தனையும் வருவன்" (வார்த்தை 201)

இப்படிக் கூறிச் செல்கிறது. வைணவக் கல்வியைக் கற்பதற்க எம்பெருமானார் இடைவிடாது முயன்றார். தன் இயல்பான உருச் சிதைந்து பிரிதொன்றாக மாறுமளவிற்கும் கற்றுக்கொள்ள ஆவலோடு இருந்தார். இத்தகைய பெறுமதிகளின் வாயிலாகவே இந்தியத்தத்துவ வரலாற்றில் சங்கரரின் அத்வைதத்திற்கு எதிராக விசிஸ்டாத்வைதம் என்னும் கோட்பாட்டை நிலைநிறுத்தினார்.

**வேதம் அருளிச் செயல் விமர்சனம்**

நம்மாழ்வார் தென்கலை வைணவத்தில் உயரிய இடத்தில் வைக்கப்பட்டிருக்கிறார். அவர் இயற்றிய நூல்கள் ஆரிய வேதங்களுக்கு இணையானவை எனப் போற்றப்படுகின்றன. குறிப்பாக நம்மாழ்வாரின் திருவாய்மொழி என்னும் பனுவல், திராவிட வேதம் என்று அடையாளப்படுத்தப்படுகிறது. வைணவத் தத்துவ உருவாக்கத்திற்கான ஊற்றுக்கண் திருவாய்மொழியே ஆகும். ஏனைய ஆழ்வார்களின் பாசுரங்களும் பிற வேதங்களாகக் கருதப்படுகின்றன. மொத்தத்தில் பன்னிரு ஆழ்வார்களின் ஈரத்தமிழ்ப் பாசுரங்களும் அருளிச் செயல்களாக மதிக்கப்படுகின்றன. எம்பெருமானார் வேதத்தையும், அருளிச் செயலையும் இப்பின்புலத்தில் விமர்சித்துள்ளார். தனது சீடர் முதலியான்டானுக்குப் பத்து வார்த்தைகள் அருளினார். அவர் அருளிய ஆறாம் வார்த்தை,

கரும்புக்கும் கண்டுக்குமுள்ள தன்னேற்றம் எங்ஙனனே? என்னில் நாம் வேதமாகிற கரும்பைக் கடித்துப் பல்லு முறிவுதோம், அவர்கள் ஸாரத்வயமாகிற கண்டைக் கடித்து இன்புறுவர்கள் (வார்த்தை 450)

என அருளிச் செயலின் ஏற்றத்தை இவ்விதமாகச் சுட்டிக்காட்டியது. இங்கு தமிழ் அடையாள அரசியல் பேசப்படுகிறது என்பது தான் உண்மை. வேதம் படித்தால் கரும்பைக் கடித்து பல் முறிந்தது போலாகும். ஆனால் ஆழ்வார்களின் தமிழ்ப் பாசுரங்கள் கற்கண்டு போல இனிக்கும் தன்மையுடையவை. ஆகவே திராவிட வேதமாகிய ஆழ்வார்களின் பாசுரங்கள்தான் மதிக்கப்பட வேண்டியவையென எம்பெருமானார் அருளிச் செய்தார். வைணவம் இந்நிலைப்பாட்டையே கட்டிக்காக்க விரும்பியது. இது வடகலையில் சாத்தியப்படவில்லை.

**தற்காப்பும் எச்சரிக்கையும்**

வரலாற்றில் சமயங்கள் பல்வேறு இக்கட்டுக்களைச் சந்தித்தே தம்மை நிலைநிறுத்திக் கொண்டன. சமயத்திற்கு உள்ளேயும் புறம்பாகவும் பகையை எதிர்கொண்டன. அதாவது இருமுனைகளில் சமயங்கள் இயங்க வேண்டிய தேவையிருந்தது. பரபக்க சமயங்களிடமிருந்து தன்னைப் பாதுகாத்துக்கொள்வதும் இரண்டாம் நிலையில் தன் – சமயத்தை ஏற்றுக்கொண்ட அடியார் கூட்டத்தைப் பாதுகாப்பதுமென அவை தமது செயல்திட்டங்களை அமைத்தன. இந்நிலையில் வைணவம் தமது அடியார்களை இறைவனைவிட வலிமை பெற்றவராகக் கருதியது. அடியாரைப் பகைத்துக் கொள்ளுதலை முற்றிலும் எதிர்ப்பிற்கு உள்ளாக்கியது. அதன் ஒரு பகுதியாக வைணவம்,

எம்பெருமான் பக்கலிலே அபராதம் பண்ணினால் ஜந்மாந்தரத்திலே ஈடேறலாம். ஸ்ரீவைணவர்கள் பக்கலிலே அபராதம் பண்ணினால் ஜந்மாந்தரத்திலும் இல்லை (வார்த்தை 267).

இவ்வாறு எச்சரிக்கை விடுத்தது. எம்பெருமானைப் பகைத்துக்கொள்வதைவிட அடியாரைப் பகைத்துக் கொள்வதற்கு கழுவாய் கிடையாது எனத் தனது பகைப்புல சமயங்களுக்கு, கூட்டத்தாருக்கு வெளிப்படுத்தியது என்றே சொல்லவேண்டும்.

**தமிழ் வைணவமும் கைங்கர்யமும்**

தமிழ்ச் சமூகத்தில் தமது கொள்கைகளை விரித்துரைத்த சமயங்கள் பெரும்பான்மையானவை தமது அடியார்களைத் தம்மை நோக்கி இழுத்தன. அடியார்களும் சமயத்தின் கொள்கைகளுக்குத் தங்களையே ஒப்புக்கொடுத்து வாழ்ந்தனர். தமிழகத்தில் நிலவிய சாதி வேறுபாடுகள், சமய அடையாளங்களைக்கூடச் சிலருக்கே சாத்தியப்படுத்தின.

பெரும்பான்மையான சாதியினர் பெண்கள், சமூகத்தின் விளிம்பில் வசித்த மக்கள் முதலியோருக்குச் சமயத்தின் கதவுகள் எப்போதுமே திறந்ததில்லை. தமிழில் உருவான சமய இலக்கியங்கள் இதனை எடுத்துரைக்கின்றன. சைவப் பின்புலத்தில் பரவலாகப் புழங்கிவரும் தொன்மம் ஒன்று ஞானசம்பந்தரும் நாவுக்கரசரும் திருமறைக்காட்டில் நிகழ்த்திய போராட்டம் எல்லோரும் அறிந்ததுதான். அதுவும்கூட வேதத்தைப் பாடியபோதுதான் கோயில் கதவு திறந்தது. ஆனால் வைணவத்தில் நிலைமை அவ்வாறு இல்லாமல் சில விதிகள் தளர்த்தப்பட்டிருந்தன.

தமிழ் வைணவம் வேறு சமயங்கள் சொல்லாத முன்னுரிமை அளிக்காத அடியார்த் தொண்டுக்குச் (கைங்கர்யம்) சிறப்பான இடம் அளித்தது. சமூகத்தில் எந்தச் சாதிப்பிரிவில் இருந்தாலும் திருமாலுக்கு அடியாரானால் கைங்கர்யம் செய்யத் தகுதி உடையவர்களாக அடையாளப்படுத்தப்பட்டனர். ஒருவகையில் வைணவம் கைங்கர்யத்தின் மூலமாக நிலவுடைமைச் சமூகத்தில் இறுக்கமற்ற தன்மையை ஏற்படுத்த முயற்சி செய்தது. கைங்கர்ய வளர்ச்சிக்கு ஆதார நூல்களாக இராமாயணம், மகாபாரதம், பாகவதம் முதலிய வடமொழிப் பனுவல்களைப் பயன்படுத்திக் கொண்டது. வார்த்தாமாலை கைங்கர்யம் எவ்வாறு அமையவேண்டுமெனில் அடியார்கள் மனதை அறிந்து அவர்களின் விருப்பத்திற்கு கேடு செய்யாத முறையில் குறிப்பால் அவர்களுக்குரிய தொண்டினைச் செய்யவேண்டும் எனச் சுட்டிக்காட்டுகிறது. இராமானுசருக்கு ஐந்து பேர் ஆசாரியன்மாராக விளங்கினர். அவர்களுள் மாறநேரிநம்பி என்பவரும் ஒருவர். மாறநேரிநம்பி பிறப்பினால் சூத்திரர், நான்காம் வருணத்தைச் சேர்ந்தவர் ஆவார். அவர் திருநாடு அலங்கரித்தபோது பெரிய திருமலைநம்பி இறுதிக் கிரியைகளைச் செய்தார். இது குருபரம்பரை தரும் வரலாறாகும். கைங்கர்யத்திற்கு பிறப்பு, சாதி, வருணம் முதலியன அப்பாற்பட்டவை. அதற்கு ஒரே அளவுகோல், யாவரும் திருமால் அடியராக இருக்கவேண்டும் என்பதே, வைணவம் முன்வைக்கும் கருத்துநிலை.

**கைங்கர்யத்தின் மேன்மை**

வைணவப் பிரிவில் குறிப்பாகத் தென்கலை வைணவம் பிற சமயங்களில் இருந்து மாறுபட்ட சில தனித்தன்மைகளைக் கொண்டு விளங்கியது. தென்கலை வைணவப்பிரிவு முன்வைத்த சில கருத்து நிலைகள், சிந்தனைகள் அன்றைய நிலையில் வரலாற்றில் சில அதிர்வுகளை உருவாக்கின. தென்கலை வைணவம் அடியார், ஆசாரியார், இறைவன் ஆகிய மூவரையும் பிரிக்க முடியாத கூறுகளாக முன்வைத்தது. இம்மூவரில் ஒருவரிலிருந்து ஒருவர் எவ்விதத்திலும் உயர்ந்தவரோ தாழ்ந்தவரோ அல்லர். மூவரும் இணையானவர்களே. கைங்கர்யம் இம்மூவராலேயே மேற்கொள்ளப்பட்டுவந்தது. இம்மூவருக்கான கைங்கர்யத்தை வடுகநம்பி சில உவமைகள் வழி விளக்கியுள்ளார். அதாவது,

ஆசார்ய கைங்கர்யம் – தனக்குப்பசி விளைந்து உண்மைக் பாகவத கைங்கர்யம் – தாய்க்குச் சோறிடுகை பகவத் கைங்கர்யம் – ஒப்பூணுண்கையும் மூப்புக்குச் சோறிடுகையும் (வார்த்தை 221)

என்று வார்த்தாமாலை கூறுகிறது.

இறைவனுக்குச் செய்யும் கைங்கர்யத்தைவிட ஆசாரிய அடியார் கைங்கர்யங்கள் உயர்வானவை. ஆசாரிய கைங்கர்யம் தன் பசிக்கு உண்ணல், அடியார் கைங்கர்யம் தாய்க்கு உணவளித்தல் என வைணவம் கூறியது. ஆனால் இறைவனுக்குச் செய்யும் கைங்கர்யம் முதியோர்க்கு உணவளித்தல் போன்றும் ஒப்புக்கு உணவு உண்ணுதல் போலவும் என்று விளக்கியது.

**முடிவுகள்**

- தமிழ்உரை வரலாற்றில் பின்பழகிய பெருமாள் ஜீயரால் வார்த்தமாலை திட்டமிட்டுத் தொகுக்கப்பட்டிருப்பது கவனப்படுத்தப்பட வேண்டும்.
- நாதமுனிகள் தொடங்கி வடக்குத் திருவீதிப்பிள்ளை வரையிலான வைணவ ஆசாரியர்கள் அருளிய தத்துவங்கள் வார்த்தாமாலையில் இடம்பெற்றுள்ளன.
- தமிழ் வைணவத்தில் அடியார் வழிபாட்டிற்கு விசடமான முக்கியத்துவம் அளிக்கப்பட்டது.
- அடியார்கள் இறைவனை விடப் பலம் பொருந்தியவர்களாக கருதப்பட்டனர். அடியார்களைப் பகைத்துக்கொள்ளுதல் எம்பெருமானைப் பகைத்துக்கொள்ளுதலை விடக் கொடியது.
- ஆச்சாரியனே திருமாலை அடியார்களுக்குக் காட்டுபவனாக இருக்கிறான். எம்பெருமானை நெறிப்படுத்தும் திறன் ஆசாரியனுக்கு உண்டு.
- வார்த்தாமாலையில் வைணவர் இலக்கணம், ப்ரபத்தி மார்க்கம், திருமந்திரம், த்வயம் முதலியவற்றின் இலக்கணம் பேசப்பட்டுள்ளது. எனவே இது வைணவக் கோட்பாட்டை வலியுறுத்தும் பனுவலாக விளங்குகிறது.

**ஆதார நூல்**

வார்த்தாமாலை, பின்பழகிய பெருமாள் ஜீயர், சாந்தி சாதனா, 2002.